**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.219/2024- PW-10**

| | |
|---|---|
| Name | திரு. லோகேஷ் |
| Husband/Father Name | பிச்சாண்டி |
| Village /Area | வேலூர் |
| Taluk | வேலூர் |
| Occupation | உதவி ஆய்வாளர் |
| Age | 33 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 05.11.2025.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது தக்கோலம் கிராமிய காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.06.2024 அன்று நெமிலி காவல் நிலையத்தில் நான் பணியில் இருந்த போது காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலின் பேரில் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த விநாயகம் த/பெ.கிருஷ்ணன், வயது 48, பஜனை கோயில் தெரு, கீழ்வெங்கடாபுரம் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்றதில் விநாயகம் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருவதாகவும் அவருக்கு திருமணம் ஆகி கூலி வேலை செய்வதாகவும், அவருக்கு மகாலட்சுமி என்ற மனைவியும், 2 மகன்களும் அவருக்கு இருப்பதாகவும் 19.06.2024 ம் தேதி இரவு சுமார் 08.30 மணிக்கு அனைவரும் சாப்பிட்டு விட்டு குடும்பத்துடன் தூங்கியதாகவும் இரவு 11.00 மணிக்கு சிறுநீர் கழிக்க எழுந்த போது

மனைவி மகாலட்சுமி வீட்டில் இல்லை என்றும் அவரை அக்கம் பக்கம் தேடியதாகவும், அவரை காணவில்லை என்றும் சந்தேகம் ஏற்பட்டு அதே ஊரில் ரோட்டு தெருவில் வசிக்கும் சரவணன் வீட்டிலும் சென்று பார்த்த போது மகாலட்சுமி சரவணனிடம் பேசிக்கொண்டிருந்தார் என்றும், உடனே விநாயகம் அவரது மனைவியை ஏன் சரவணனனுடன் பேசிக்கொண்டிருக்கிறாய் என்று ஆத்திரம் அடைந்து மனைவியை அடித்து அங்கிருந்து வீட்டிற்கு அழைத்து செல்ல முற்பட்ட போது சரவணன் ஏன்டா அவளை அடிக்கிறாய் "**ங்கோத்தா தெவிடியா பைய்யா"** என்று அசிங்கமாக திட்டி விநாயத்தின் கழுத்தின் மீது கையை வைத்து மற்றொரு கையால் அவரது கைலியை உருவி கையில் வைத்திருந்த அரை அடி நீளம் கொண்ட கத்தியால் அதோடு செத்து போடா என்று சொல்லிக் கொண்டே கொலை செய்யும் நோக்கத்தோடு ஆணுறுப்பு விதைப்பையில் ஓங்கி வெட்டியதாகவும் இரத்தம் வடிந்த நிலையில் அவர் அண்ணன் வீட்டிற்கு சென்று அண்ணன் மகன் குறிஞ்சி செல்வத்தை அழைத்து கொண்டு காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்று மேல் சிகிச்சைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்ந்ததாக புகார் வாக்குமூலம் தெரிவித்தார். அந்த வாக்குமூலத்தின் பேரில் நிலையம் வந்து நெமிலி காவல் நிலைய குற்ற எண். 184/2024, சட்ட பிரிவு 294(பி), 324, 307 இதச படி வழக்கு பதிவு செய்து புலன் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அதசாஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதவு செய்தது நான் தான். நான் தான் அசா.1 விநாயகத்தை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு

செய்தேன். அந்த புகார் வாக்குமூலத்தை செங்கல்பட்டு அரசு பொது மருத்துவமனையில் பதிவு செய்தேன். இந்த வழக்கில் நான் அசா.1 ஐ தவிர வேறு யாரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

அசா.1 அவருடைய குறுக்கு விசாரணையில் நான் அவரிடம் வெற்று தாளில் தான் கையொப்பம் பெற்றேன் என்று கூறியிருந்தால் அது தவறு நான் கூறுவது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றும் நானாக தான் வெற்று தாளில் அசா.1 ல் கையொப்பத்தை பெற்றுக்கொண்டேன் என்றும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.11.05 18:13:15 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.